SRI LANKA

**இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்**

# மட்டம II பரீட்சை – ஜூலை 2021

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

## (203) வியாபாரச் சட்டம் (BLA)

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்**
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05
தொ.பே - 011 2 559 669

**கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு**

## இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்

## மட்டம் II பரீட்சை – ஜீலை 2021

# (203) வியாபாரச் சட்டம்

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**(மொத்தம் 25 புள்ளிகள்)** **பகுதி - A**

***வினா 01 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :***

1.1 (4) உயர் நீதிமன்றம்

1.2 (3) முதலீட் சபையின் தொழிற்பாடுகள்

1.3 (4) பொருள்களை வாங்குபவர் எந்தவொரு இடையூறும் இன்றி அந்தப் பொருள்களின் முழு உடைமையையும் கொண்டிருத்தல் வேண்டும்.

1.4 (2) a யும் b யும் மட்டும்

1.5 (3)

1.6 (4) மேற்கூறிய அனைத்தும்

*(ஒவ்வொன்றுக்கும் 2 புள்ளிகள்,)*
*(12 புள்ளிகள்)*

1.7 பிழை

1.8 பிழை

1.9 சரி

*(ஒவ்வொன்றுக்கும் 1 புள்ளிகள்,)*
*(03 புள்ளிகள்)*

**1.10 இலங்கையிலுள்ள ஒழுங்குப்படுத்தும் நிறுவனங்கள்.**

(1) பட்டயக்கணக்காளர் சங்கம்.
(2) இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு தர கண்காணிப்புச் சபை.
(3) பிணைகள் பரிவர்த்தனைகள் ஆணைக்குழு.
(4) கொழும்பு பங்குச் சந்தை.
(5) முதலீட்டுச் சபை.
(6) கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்.
(7) சுங்கத் திணைக்களம்.
(8) இலங்கை மத்திய வங்கி.

SRI LANKA

**1.11 பொருட்கள் விற்பனை ஒப்பந்தம் ஒன்றின் கூறுகள்.**

(1) ஒப்பந்த விடயப் பொருள் கட்டாயம் பொருளாக இருத்தல் வேண்டும்.

(2) விற்பனையாளர் பொருளின் உரிமையை கொள்வனவாளருக்கு மாற்றுதல் அல்லது மாற்றுவதற்கு இணங்குதல் வேண்டும்.

(3) உடன்படிக்கையானது பணவடிவிலான விலை எனும் பிரதிபயனுக்காக மேற்கொள்ளப்படிருத்தல் வேண்டும்.

(4) இரண்டு தரப்பினர்கள் இருத்தல் அவசியம்.

(5) சட்ட ரீதியான தன்மை.

**1.12 நிதி நுண்ணறிவு அலகின் நோக்கங்கள்.**

(1) நிதிமோசடிக்கெதிரான பணத்துாயதாக்கல் நடவடிக்கைகளை தீவிரவாதத்திற்கு நிதியுதவியளித்தல் ஆகியவற்றுக்கு எதிரான நடவடிக்கைகளை இலங்கையில் பலப்படுத்தல்.

(2) நிதி மோசடி பணத்தூய்தாக்கல், தீவிரவாதத்திற்கு நிதியுதவியளித்தல் போன்ற நடவடிக்கைகளை தடுக்க பொருத்தமான அதிகார சபைகளுக்கு ஆலோசனை வழங்குவதற்க்காக அவை தொடர்பிலான தகவல்களை சேகரித்தல் பெறுதல், ஆராய்தல்.

(3) இலங்கை சட்டத்தினை சர்வதேசத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரத்திற்கு உயர்த்துதல்.

(4) நிதி மோசடி மற்றும் தீவிரவாதத்திற்கு நிதியுதவியளித்தல் ஆகியவை தொடர்பில் சர்வதேச அமைப்புக்களின் பரிந்துரைகளையும் சிறந்த நடைமுறைகளையும் அமுல்ப்படுத்தலும் சர்வதேச அமைப்புக்களுடனான ஒத்துழைப்பை பலப்படுத்தலும்.

(5) நிதிமோசடி தீவிரவாதத்திற்கு நிதியுதவியளித்தல் ஆகியவை தொடர்பில் பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

**1.13**

(1) தனிப்பட்ட தகவல்களுடன் தொடர்புடைய தகவல்கள்.

(2) அரசின் பாதுகாப்பை அல்லது அதன் ஆள்புல இறைமையை அல்லது தேசிய பாதுகாப்பை பாதிக்கக் கூடிய தகவல்கள்.

(3) சில தகவல்களை வெளியிடுதல் இலங்கையின் பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும் போது.

(4) தகவல்கள் ஏதேனும் இலங்கை ஏனைய அரசுகளுடன் பேணுகின்ற உறவினை அல்லது சர்வதேச சட்டத்தினை பாதிக்கப்படுகின்ற போது.

(5) பெருமளவிலான பொது மக்களின் அக்கறை அத்தகைய தகவலின் வெளியிடுகை அனுமதிக்கின்றதென பகிரங்க அதிகார சபை திருப்திப்பட்டது. அல்லாவிடின் 2003

ஆம் ஆண்டின் 36ம் இலக்க புலமைச் சொத்து சட்டத்திக் கீழ் பாதுகாக்கப்படும் வர்த்தக இரகசியம், வியாபார இரகசியம் அல்லது புலமைச் சொத்து உட்பட தகவலின் வெளியிடுகையானது மூன்றாம் நபரொருவரின் போட்டி நிலைக்கு தீங்கு விளைவிக்க கூடியதாக இருக்கும் போது.

(6) ஏதேனும் ஒரு நபருடன் தொடர்புடைய மருத்துவ பதிவுகளை வெளிப்படுத்த ஏதுவாக அமைகின்ற தகவல்கள்.

(7) ஒரு தொழில்முறை நபரொருவரால் அரச அதிகார அமைப்பிற்கு ஏதேனும் சேவைகள் வழங்கப்படுமிடத்து அத் தொழில்முறை நபருக்கும் அரச அதிகார அமைப்பிற்கும் இடையிலான தொடர்பாடல்கள் அடங்கிய தகவல்களை வெளியிடுதல் ஏதேனும் எழுத்திலான சட்டங்களில் அனுமதிக்காத சந்தர்ப்பங்களில்.

(8) நம்பக உறவினை தக்கவைத்திருப்பதற்காக இரகசியமாக வைத்திருக்க தேவைப்படுத்தப்பட்ட தகவல்கள்.

(9) ஏதேனும் தகவல்கள் ஏதேனும் குற்றங்களை தடுப்பதற்கோ அல்லது கண்டுப்பிடிப்பதற்கோ அல்லது குற்றம் செய்தவர்களை கைது செய்வதற்கோ அல்லது அவர்களுக்கு எதிராக வழக்கு தொடர்வதற்கோ பாரிய பாதகத்தை ஏற்படுத்துகின்ற போதும்.

(10) தகவல்கள் தேசிய பாதுகாப்பு அல்லது சட்ட அமுலாக்கல் போன்ற இரகசியமான தகவல் மூலங்களை அடையாளங்கண்டு வெளிப்படுத்தக் கூடியதாக இருத்தல்.

(11) சில தகவல்கள் வெளியிடுகை பாராளுமன்றம் அல்லது மாகாண சபைகளின் சிறப்புரிமைகளை மீறுவதாகக் காணப்படல்.

**1.14 காசோலை குறுக்கு கோடிடலுக்கான வரையுனருக்கான அதிகாரங்கள்.**

(1) வரையுனர் காசோலையை சிறப்பு அல்லது பொதுக் குறுக்கு கோடிடலாம்.

(2) வரையுனர் குறுக்குகோடிடலை இரத்து செய்யலாம்.

*(ஒவ்வொன்றுக்கும் 2 புள்ளிகள்,)*
*(10 புள்ளிகள்)*

*(25 புள்ளிகள்)*

***A பகுதி முடிவு***

aat SRI LANKA

## *வினா 02 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

| |
|---|
| ***அத்தியாயம் 04 – முகவராண்மைச் சட்டம்*** |
| ***அத்தியாயம் 10 – வணிக சூழல் தொடர்பான குற்றங்கள்.*** |

**(அ)**

முகவராண்மை என்பது இரண்டு நபர்களுக்கிடையிலான நம்பிக்கை தொடர்பிலான உறவு இங்கு ஒரு நபர் தமக்காக தனக்காக மற்றைய நபர் செயற்படுவதற்க்காக அதிகாரத்தை வழங்குவார். முகவர் முகவராண்மை உடன்படிக்கைப் படி முதல்வருக்கு நம்பிக்கையான செயற்பாடுகளை மேற்க்கொள்ள கடமைப்பட்டுள்ளார். முதல்வருக்காக செயற்படுகின்ற முகவர் இரகசிய இலாபங்களை உழைக்க கூடாது. இரகசிய இலாபம் உழைக்கப்படும் போது முதல்வருக்கு பின்வரும் நிவாரணங்களை பெறலாம்.

- ❖ முகவருக்கு வழங்கப்பட வேண்டிய தரகை நிறுத்தலாம்.
- ❖ முதல்வர் முகவரின் இரகசிய இலாபத்தை மீளப் பெற உரித்துடையவர்.
- ❖ முகவராண்மையை முடிவுறுத்தலாம்.

குறித்த சட்டரீதியான முகவராண்மையின் கடமையானது SalFord Corporation v Lever என்ற வழக்கில் விளக்கப்பட்டுள்ளது.
இவ்வழக்கில் நிலக்கரிக்காக S ஆலும் விலைமனுக்கோரப்பட்டது L அவருடைய விலைமனுவையும் அனுப்பினார். அதன் போது குறித்த ஏலவிற்பனைக்கு பொறுப்பான முகாமையாளர் ஒருவர் தனக்கு தரகை பெறும் முகமாக L க்கு சார்பாக நடந்துக்கொண்டார் இவ்விடயம் தொடர்பாக முதல்வருக்கு அறியப்பட்ட போது L க்கு ஏலத்துக்கு பொறுப்பான முகாமையாளருக்கும் எதிராக நடவடிக்கை (இரகசிய இலாபம்) எடுக்கப்பட்டது. நீதிமன்றம் இங்கு உழைக்கப்பட்ட இரகசிய இலாபத்தை முகவர் மற்றும் L,S அதிபருக்கு மீள் செலுத்த வேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

இங்கு தரப்பட்ட விபரணத்தின் படி சரத் என்பவர் 5M வெளிபடுத்தப்படாத இரகசிய இலாபத்தை களஞ்சிய சாலை முகவருடன் சேர்ந்து ஈட்டியுள்ளார். எனவே வெள்ளை உப்பு தனியார் கம்பனிக்கு சட்டரீதியான நிவாரணங்களை சரத் உழைத்த இரகசிய இலாபத்துக்கு எதிராகவும் அவரை வேலையிலிருந்து நீக்குவதற்க்கான நடவடிக்கைகளையும் எடுக்கும்.

**சரத்துக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள்.**

- ❖ கம்பனி சரத்துக்கு வழங்க வேண்டிய தரகு கட்டணத்தை நிறுத்தலாம்.
- ❖ இரகசியமான நடவடிக்கை ஊடாக சரத் உழைத்த இரகசிய இலாபத்தை மீளப்பெறலாம்.
- ❖ கம்பனி சரத்துடனான முகவராண்மையை முடிவுறுத்தலாம்.

மேலும் வெள்ளை உப்பு தனிக் கம்பனிக்கு சரத்துக்கு கொடுக்க வேண்டிய
கொடுப்பனவுகளை குறித்த வழக்கு நிறைவேறும் வரை இடைநிறுத்தவும் முடியும்.

***(06 புள்ளிகள்)***

(ஆ)
குறித்த தகவல்களுக்கமைவாக நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் மற்றும் முகவராண்மை சட்டத்திற்க்கேற்ப பகுப்பாய்வு மேற்கொள்ளவேண்டும்.

நுகர்வோர் விவகார அலுவல்கள் சட்டத்தின் பிரிவு 11, இல 09 2003 க்கு அமைவாக பொருட்களை விற்பனை அல்லது கொடைமுனைவு செய்யும் போது சந்தை விலைக்கு அதிகமாயின் தண்டனைக்குரிய குற்றமாகும். இனி இங்கு வெள்ளை உப்பு தனிக் கம்பனிக்கு 100 ரூபாவுக்கு உப்பை விற்றது குறித்த சட்டத்திற்கு அமைய குற்றவியல் குற்றமாக கருதப்படுகிறது.

இங்கு முதல்வருக்கு தெரியாமலேயே முகவர் சந்தை விலைக்கு அப்பால் விற்றிருப்பினும் முதல்வரே அதற்கு பொறுப்பு கூற வேண்டும். ஆகவே முதல்வர் அதிகளவில் அல்லது குறைந்தளவில் பொறுப்புடையவர் முதல்வரும் முகவரும் சேர்ந்து அல்லது முதல்வர் தனித்து பொறுப்பை செலுத்த வேண்டும்.

வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைய வெள்ளை உப்பு தனி கம்பனிக்கு இரகசிய முறையிலேயே முகவர் இச்செயற்பாட்டை மேற்க்கொண்டிருக்கிறார். எனவே வெள்ளை உப்பு தனிக்கம்பனி உயர்ந்த விலையில் உப்பை விற்றதற்கு பொறுப்பாகாது சரத் சட்டத்தின் பிரிவு 11 வின் நுகர்வோர் விவகார அலுவல்கள் சட்டத்திற்கு அமைய பொறுப்பு.

*(04 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

## *வினா 03 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 08 – காப்புறுதிச் சட்டம், வாடகை கொள்வனவு மற்றும் குத்தகை.***

(அ)
அண்மைக்காரணத்தத்துவம் என்பது காப்புறுதியில் ஆயுள் அல்லது சொத்துக் காப்புறுதிக்கான அண்மித்த விபத்து ஏற்படக்கூடிய காரணிகளாகும். குறித்த ஒப்பந்தத்தில் விபத்துக்கான காரணம் சேர்க்கப்பட்டிருந்தால் மட்டுமே காப்பினர் இழப்பீட்டை செலுத்துவார்.

அண்மைகாரணம் மதிப்பீடலானது காலத்தின் அடிப்படையில் இல்லாமல் நட்டத்தை ஏற்படுத்த பொரும்பாலும் காரணமாக இருந்த விடயம் அண்மைக்காரணமாக கருதப்பட வேண்டும். இந்த வகையில் அண்மைக் காரணமாக விடயம் ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டிருந்தால் காப்பிடுநர் நட்டஈடு வழங்க வேண்டும்.

கோவிட் 19 ராஜாவின் இறப்புக்கான அண்மைக் காரணமாக அடையாளப்படுத்தலாம். கோவிட் 19 அசாதாரண மரண நிலைகளை உலக சுகாதார நிறுவனம் ஏற்றுக்கொண்டிருக்கும் நிலையில் சீதா நட்டஈட்டை பெற அசாதாரண நிலைகள் ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டிருத்தல் அவசியம்.

ஆனால் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தில் அசாதாரண நிலைகளை உள்ளடக்கப்படாத நிலையில் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் நடைமுறையில் செல்லுபடியானதாக இருப்பினும் கூட சீதாவுக்கு நட்டஈட்டை பெற உரித்தற்றவர்.

***(06 புள்ளிகள்)***

**(ஆ)**

காப்புறுதி உடன்படிக்கையானது காப்புறுதி செய்யத்தக்க உரிமை கோட்பாட்டின் கீழ் உருவாக்கப்பட வேண்டும். காப்புறுதி செய்யத்தக்க உரிமையானது காப்புறுத்துவோருக்கு சட்ட ரீதியான காப்புறுதி விடயம் தொடர்பான உரிமையே ஆகும். காப்புறுத்தும் உரிமை இல்லாமல் காப்புறுதி உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப்பட்டிருப்பின் அது வெற்றும் வெறிதானதாகும். ஒருவருக்கு காப்புறுத்தக்கூடிய உரிமை உள்ளது என்பது விடயம் பொருள் இருக்கும் போது காப்புறுத்துவோன் பண வடிவிலான அனுகூலத்தையும் விடயப்பொருள் அழிவடையும்போது பணவடிவிலான நட்டத்தையும் அனுபவிப்பார்.

அந்த வகையில் பின்வரும் நபர்கள் மீது காப்புறுத்தக் கூடிய உரிமையை கொண்டிருப்பார்கள்.

- கடன்கொடுநர், கடன்பட்டோர் ஆயுள் மீது காப்புறுத்தக் கூடிய உரிமையை பெறுவார்.
- கடன் ஒன்றுக்கு பிணைவழங்குபவர் கடன்பெறுநரின் ஆயுள் மீது காப்புறுத்தக்கூடிய உரித்தை பெறுவார்.
- ஒரு நபர் தனது ஆயுள் மீது தனது வாழ்க்கை துணையின் ஆயுள் மீது காப்புறுத்த கூடிய உரிமையை பெறுவார்.

இங்கு ராஜாவின் மனைவியான சீதா ராஜாவின் ஆயுள் மீது காப்புறுதியை பெற்றுள்ளார். அந்த வகையில் சீதா ராஜாவின் ஆயுள் மீதான காப்புறுதியை பெறுநர் ஆவார். ஆகவே இங்கு சீதா ராஜாவின் ஆயுள் மீது காப்புறுத்தக் கூடிய உரிமையை கொண்டுள்ளாரா என்பது பற்றி கவனம் செலுத்த வேண்டும்.

Griffiths vs Fleming வழக்குப்படி, நீதி மன்றம் கூறியதாவது ஒரு நபர் தனது ஆயுள் மீதும் ஒரு வாழ்க்கைத்துணை தனது மற்றைய வாழ்க்கைத் துணையின் ஆயுள் மீதும் காப்புறுத்தும் உரிமையை கொண்டிருப்பார் என்று கூறியது.

இந்த வகையில் சீதா தனது கணவரின் ஆயுள் மீது காப்புறுத்தக் கூடிய உரிமை கொண்டுள்ளார். என்றும் ராஜாவின் இறப்பின் போது சீதா நட்டஈட்டை பெற உரித்துடையவர் என்றும் கூறலாம்.

மேலும் ராஜாவின் உயிரிழப்பு கார்விபத்து ஒன்றினால் ஏற்பட்டிருப்பதால் பொதுவாக விபத்து ஆயுளுறுதியில் உள்ளக்கப்படுவதாலும் சீதா நட்டஈட்டை பெற உரித்துடையவர்.

***(04 புள்ளிகள்)***

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

aat SRI LANKA

## *வினா 04 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 05 - கம்பனிச் சட்டம்***

கம்பனியின் நோக்கம் அதன் அங்கத்தவர்களின் உரிமை கடமைகளைக் கொண்ட ஒரு ஆவணமே அமைப்பு அகவிதியாகும்.

கம்பனிச் சட்டத்தின் பிரிவு 2 க்கு அமைவாக அமைப்பு அகவிதிக்கு அமைவாக கம்பனியானது தனது ஏதாவது வியாபார நடவடிக்கைகளை அல்லது கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளலாம். கம்பனிச் சட்டம் இல 07 2007ம் ஆண்டின் பிரிவு 13 இன் படி அமைப்பு அகவிதியில் கம்பனி ஒன்று அதன் நோக்கத்தை குறிப்பிடுமாயின் அது அதற்கமையவே செயற்பட வேண்டும். எப்படியாயினும் கம்பனியின் செயற்பாடுகள் ஒப்பந்தம் அல்லது கம்பனியின் ஏனைய கடமைகள் மற்றும் கம்பனி சொத்துக்களை விற்றல் மற்றும் வாங்குதல் ஆகியன கம்பனி நோக்கத்துடன் பொருந்தாத போது அவை செல்லுபடி அற்றதாகவே இருக்கும். யாராவது ஒரு இயக்குநர் கம்பனியின் நோக்கத்திற்கு முரணான வகையில் கம்பனிக்கான சொத்துக்களை வாங்க அல்லது விற்க அனுமதிப்பாராயின் அவ்வியக்குநர் தனது கடமைகளை மீறியுள்ளார் என்பதாகும்.

இங்கு வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைய ABC PLC யின் பிரதான நோக்கமானது விவசாய நடவடிக்கைகளான விவசாயம் செய்தல் நடுகை விளைவை பெறல் மற்றும் களஞ்சியப்படுத்தல் செயற்பாடுகளாகும்.
எனினும் ராஜாமோகனின் நோயாளர் காவுகை வண்டிகளை கொள்வனவு செய்து வாடகைக்கு விடுதலானது கம்பனியின் நோக்கத்திற்கு முரணான செயற்பாடாகும்.

எவ்வாறாயினும் இவ்வாறான அசாதாரண தீர்மானம் எடுத்தலானது சட்ட நீதி அற்றவை இல்லை அல்லது வியாபாரச் செயற்பாடுகளுக்கு அப்பாற்பட்டவை அல்ல ஆனால் அவை இயக்குநரின் கடமை மீறல் என கம்பனிச் சட்டம் கூறுவதால் இயக்குநர் தனிப்பட்ட ரீதியில் பொறுப்பானவராவார்.

எனவே கம்பனிச் சட்டமான இல 07 2007ம் ஆண்டு பிரிவு 188 க்கு அமைவாக ராஜாமோகன் தனது கடமைகளை மீறியுள்ளமைக்கு எதிராக பங்குதாரர்கள் நடவடிக்கை எடுக்கலாம். குறித்த ஏற்பாடுகள் கம்பனிச்சட்டம் இல 07 2007 இல் பிரிவு 17 (3) இல் குறிப்பிடப்பட்டுள்ளன.
மேலும் கம்பனியின் அமைப்பகவிதி என்பது கம்பனிக்கும் பங்குதாரருக்குமிடையேயான ஓர் சட்ட ரீதியான ஒப்பந்தமாகும். இது கம்பனியையும் அதன் பங்குதாரரையும் ஒவ்வொரு விடயத்திலும் ஒருவரையொருவர் பிணிக்கும்.

aat SRI LANKA

அமைப்பு அகவிதி பற்றி **Hickman v Romneymash Sheep Breeder** வழக்கில் விபரிக்கபப்பட்டுள்ளது. இங்கு குறிப்பிடப்பட்ட விடயத்தில் கம்பனிக்கும் அதன் பங்குதாரருக்குமிடையே ஏதேனும் பிணக்குகள் ஏற்படும் போது அவை நடுவர்களின் தலையீட்டால் தீர்க்கப்பட வேண்டும். என குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் குறித்த முரண்பாடு நீதி மன்றத்துக்கு அனுமதிக்கப்பட்டது. நீதிமன்றமானது அமைப்பக விதியானது கம்பனிக்கும் அதன் உறுப்பினருக்குமான இடையேயான ஒப்பந்தம் ஆகையால் அனைவரும் அமைப்பு அகவிதிக்கு ஏற்ப செயற்பட வேண்டும். என்றது ஆகவே முரண்பாடு ஒரு நடுவரால் தீர்க்கப்பட வேண்டும் என்றது.

அந்த வகையில் சாகீர் பிரதான பங்குதாரர் ராஜ்மோகனின் பிழையான செயற்பாட்டுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு பதிய முடியாது. எனவே நடுவர் தீர்ப்பின் ஊடாகவே நடவடிக்கை எடுக்க வேண்டும் அமைப்பு அகவிதியின் ஏற்பாட்டுக்கு அமைவாக நடுவர் தீர்ப்பு மூலமாகவும் இவ்விதியே பிரயோகிக்கப்பட வேண்டும்.

***(07 புள்ளிகள்)***

**(ஆ) பின்வரும் நபர்கள் இயக்குநராக வருவதற்க்கு தகுதி அற்றவர்கள். ஆகவே எவரேனும் நபர் சட்டத்திற்கேற்ப இயக்குநராவதற்கு குறிப்பிடப்படாத ஒருவர் இயக்குநராக வர முடியாது.**

1) 18 வயதிற்கு குறைந்த நபர்.
2) ஒரு நபர் விடுவிக்கமுடியாத குற்றமிழைத்தவர்.
3) ஒருவர் சித்த சுயாதீனமற்றவர் என அறிவிக்கப்பட்டவர்.
4) ஒருவர் சாதாரண நபராக இல்லாதபோது.
5) அமைப்பக விதிப்படி கம்பனிக்கு இயக்குநராவதற்கு தகுந்த தகுதியை கொண்டிருக்காதவர்.
6) கம்பனிச் சட்டம் இல 07 2007ம் ஆண்டு பிரிவு 213 அல்லது 214 க்கு அமைய இயக்குநராவதற்கு தடை செய்யப்பட்டவர்.
7) கம்பனிச் சட்டம் 17ம் இலக்க 1982 இன்படி இயக்குநராவதற்கு தடைசெய்யப்பட்டவர்.
8) சட்டத்தின் பிரிவு 213 படி ஐந்து வருடங்களுக்கு சட்டத்தை மீறியமைக்கான தீர்ப்பளிக்கப்பட்டு பின்வருமாறு அவர் கம்பனியை முகாமைச் செய்வதிலிருந்து தடுக்கப்படுவார்.

- ❖ சட்டத்தை மீறியமைக்காக நபர் சிறை தண்டனையை அனுபவிப்பார்.
- ❖ ஒருவரை நம்பிக்கை மீறல் அல்லது களவு என்று நிரூபிக்கப்பட்டு இருப்பவர்.
- ❖ வகையற்றவராக ஒருவர் என அறிவிக்கப்பட்டவர்.
- ❖ சித்தசுயாதீனமற்ற நபர்.

***(03 புள்ளிகள்)***
***(மொத்தம் 10 புள்ளிகள்)***

aat SRI LANKA

## *வினா 05 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

| ***அத்தியாயம் 07 – ஊழியச் சட்டம்*** |
|---|

**(அ)**

இவ்விரண்டு தரவுகளும் பொருளாதார உண்மை பரீட்சை ஊடாக சுயாதீன ஒப்பந்தக்காரர் மற்றும் ஊழியர் என்பவற்றுக்கிடையேயான வேறுபாடுகளை விபரிக்கும் ஊழியச் சட்டப் பிரிவாகும்.

பொருளாதார உண்மை பரீட்சையானது ஒப்பந்நக் கடப்பாடின் இறுதி நன்மை தொடர்பில் கவனம் செலுத்தப்படும். ஒரு நபர் தனக்கே சேவையை வழங்கும்போது அவர் சுயாதீன ஒப்பந்தகாரர் ஆவார். இங்கு வைத்தியர் ஜீவக ஒரு நோயாளியை பரிசோதிப்பதற்க்கான கட்டணமான ரூபா 2000 ஐ அறவிட்டு அதில் 50% ஐ வைத்தியசாலைக்கு செலுத்துதலானது ஒரு சுயாதீன ஒப்பந்தகாரருக்கான செயற்பாடாகும். இது ஒரு ஊழியரை பிரதிபலிக்கவில்லை.

பொருளாதார உண்மை பரீட்சையின் படி இறுதி விளைவு சேவை வழங்கும் கம்பனியால் நிறைவேற்றப்படும் போது அவர் குறித்த கம்பனிக்காக சேவையாற்றும் தொழில் பெறுநராக கருதப்படுவார். இங்கு வைத்தியசாலை வைத்தியர் ஜீவகவுக்கு மாதம் 200 000 ரூபா சம்பளம் வழங்குதலானது இவர் வைத்தியசாலையின் ஓர் ஊழியராவார்.

*(06 புள்ளிகள்)*

**(ஆ) பின்வரும் ஊழியர்கள் ஊழிய சேமலாப நிதி சட்டத்துக்கு உள்வாங்கப்படமாட்டார்கள்.**

1. அரச ஊழியர்கள்.
2. குடும்ப உறுப்பினர்கள் (குடும்பத்தை விட்டு பிரிந்து வாழும் நபர்கள் பங்களிப்பை செலுத்துவர்)
3. செயற்படாத இயக்குநர்கள்.
4. பங்குடமையின் பங்காளர்கள்.
5. வேறு சேமலாப நிதிக்கு பங்களிப்பு செய்யும் ஊழியர்கள் (Eg:- பல்கலைகழக சேமலாப நிதியம்.)
6. 14 வயதுக்கும் குறைந்த நபர்கள்.
7. 10 க்கும் குறைந்த ஊழியர்களைக் கொண்ட சமூகநலன், நலன் புரி நிறுவனங்களில் தொழில் புரியும் நபர்கள்.
8. அங்கவீனர்கள், கண்பார்வை அற்றோர், செவி புலனற்றோருக்கான அனாதைகள் நிறுவனங்களில் பயிற்சி வழங்கும் ஊழியர்கள்.

*(04 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

aat SRI LANKA

***வினா 06 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :***
**(அ)**

***அத்தியாயம் 10 - சர்வதேச வியாபாரச் சட்டம்***

சர்வதேச பரிவர்த்தனைகளின் நம்பிக்கைத்தன்மையை உறுதிசெய்ய வங்கியாளருடைய தலையீட்டின் மூலமான உறுதிப்பாட்டுக்கு நாணயக் கடிதம் பிரசித்திப் பெற்றது. அத்துடன் பணம் முற்கூட்டியே செலுத்தப்படுவதால் இறக்குமதியாளர் தரப்பிலும் , முற்கூட்டியே பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுவதால் ஏற்றுமதியாளர் தரப்பிலும் உள்ள அபாயங்களை குறைக்கின்றது.

1) நாணயக் கடிதம் (ஆவணக் கடன்) ஒரு எழுத்து மூலமான ஆவணம் இறக்குமதியாளரின் வங்கிக்கு சமர்ப்பித்ததன் பிறகு பணம் வழங்கப்படுகின்ற ஓர் ஆவணம்.
2) கொள்வனவாளர் விற்பனையாளரின் வங்கிக்கு கடன் வசதியை விற்பனையாளரின் பெயரில் மேற்கொள்ளுமாறு அறிவிப்பார் விற்பனையாளர் வங்கியுடன் கடன் வசதியை பெற்றுக்கொள்ளும் போது கொள்வனவாளர் தனது ஆவணங்களை வங்கிக்கு சமர்ப்பித்தல் அவசியம். கொள்வனவாளர் கடன் முடிவு திகதி பற்றி தனது வங்கிக்கு அறிவுரை வழங்குவார்.
3) ஆகவே கொள்வனவாளர் அனைத்து ஆவணங்களையும் (வார்நாமம், காப்புறுதிச் சான்றிதழ், விலைப்பட்டியல்) போன்றவற்றை வங்கிக்கு சமர்ப்பிப்பாராயின் கொள்வனவாளரின் வங்கி விற்பனையாளருக்கு குறித்த பணத்தொகையை செலுத்தும்.
   நாணயக் கடிதம் பற்றிய குறித்த நடைமுறைகள் சட்ட ஏற்பாடுகளை சர்வதேச வர்த்தக சம்மேளனத்தால் ஏற்படுத்தப்படுகிறது.

*(05 புள்ளிகள்)*

SRI LANKA

**(ஆ)**

***அத்தியாயம் 10 – வணிகச்சூழல் தொடர்பான சட்டங்கள்***

2003ம் ஆண்டின் 36ம் இலக்க புலமைசார் சொத்து சட்டம் பின்வரும் பண்புகளை உள்ளடக்கியது.

1) பதிப்புரிமை
2) கைத்தொழில் வடிவமைப்புக்கள்
3) ஆக்கவுரிமை
4) வியாபாரக் குறியீடும் வியாபாரப் பெயரும்
5) ஒன்றினைக்கப்பட்ட சுற்றின் திட்ட வடிவமைப்பு.
6) பூகோளக் குறியீடுகள்.

*(05 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

***B பகுதி முடிவு***

***வினா 07 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :***

**(A)**

**(அ)**

***அத்தியாயம் 02 - ஒப்பந்தச்சட்டம்***

**(i)**

குறித்த விடயத்தில் **டானியா** வரையறுக்கப்பட்ட **ஹெல்தி லைவ் வைத்தியசாலையுடன்** நான்கு வருடங்களுக்கு புதிய மரக்கறிகளை வழங்குவதாக மார்ச் 2020 இல் ஒப்பந்தம் ஒன்றில் ஈடுபட்டார். இம் மரக்கறிகள் 01 ஏப்ரல் 2020 இலிருந்து வழங்குவதாக **டானியா** ஒப்பந்தம் விலையில் 50% முற்பணமாகவும் பெற்றிருந்தார்.

இதன் படி சட்ட ரீதியாக நடைமுறைபடுத்தக்கூடிய ஒப்பந்தமொன்றில் டானியாவும் வரையறுக்கப்பட்ட ஹெல்தி லைவ் வைத்தியசாலையும் ஈடுபட்டுள்ளது என்பது தெளிவாகிறது.

ஒரு வலிதான ஒப்பந்தமொன்றுக்கான அனைத்து கூறுகளும் இங்கு பூரணப்படுத்தப்பட்டுள்ளன எனவே **டானியா** மற்றும் **வரையறுக்கப்பட்ட ஹெல்தி லைவ் வைத்தியசாலைக்குமிடையில்** சட்ட ரீதியான பிணிக்கக் கூடிய உடன்படிக்கை ஒன்று உள்ளது.

***(02 புள்ளிகள்)***

**(ii)**

2020 மார்சில் வைத்தியசாலை இன்னுமொரு ஒப்பந்தத்தில் தூய்மைபடுத்தும் திரவத்தை 01 ஏப்ரல் 2020 இலிருந்து 4 வருடங்களுக்கு வழங்குவதற்கு **டோனியுடன்** மேற்கொண்டுள்ளது. ஆனாலும் முற்பணம் எதுவும் செலுத்தப்படவில்லை ஆயினும் இங்கு **டோனிக்கும்** வைத்தியசாலைக்குமிடையில் வலிதான ஒப்பந்தம் ஒன்று காணப்பட்டது ஏனென்றால் முற்பணமானது ஒப்பந்தம் ஒன்றின் கூறாக அமைவதில்லை.

**டோனிக்கு** முற்பணம் செலுத்தாதபடியால் **டோனியுடனான** ஒப்பந்தம் முடிவடைந்து விட்டதென்று எமக்கு கூறமுடியாது ஒப்பந்தம் ஒன்றுக்கான அனைத்து கூறுகளும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. எனவே **டோனிக்கும் வைத்தியசாலைக்குமிடையே** சட்டரீதியாக பிணிக்கும் ஒப்பந்தம் ஒன்று உள்ளது.

***(02 புள்ளிகள்)***

aat SRI LANKA

**(ஆ)**

*அத்தியாயம் 02 - ஒப்பந்தச்சட்டம்*

**வரையறுக்கப்பட்ட ஹேல்தி வைத்தியசாலைக்கு எதிராக டானியாவுக்கு இருக்கும் சட்ட உரிமைகள்**

இங்கு **டானியாவுக்கும் வைத்தியசாலைக்குமிடையேயான** ஒப்பந்தமானது நிலைகுலைவு காரணமாக தடைப்பட்டுள்ளது. நிலைகுலைவான ஒப்பந்தமானது தரப்பினரின் பாதுகாப்புக்களின்றி வெளிநிகழ்வுகளினால் ஒப்பந்தம் பூர்த்தியாகாமல் இருத்தலைக் குறிக்கும். நீதி மன்றம் ஒப்பந்தம் நிலைகுலைவு தொடர்பாக பல வழக்குகளை வீசாரித்து தீர்ப்பு வழங்கியுள்ளது.

- **Avery v Bowden** என்ற வழக்கில் ஒப்பந்தமானது எதிர்காலத்தில் சட்ட ரீதியற்றதாக அல்லது அரச தலையீட்டுக் காரணமாக நிலைக்குலைந்தது.

பொதுவாக சட்டத்தின் படி நிலைகுலைவடைந்த ஒப்பந்தமானது முடிவுறுத்தப்படும். இங்கு **டானியா** மற்றும் **வரையறுக்கப்பட்ட ஹெல்தி லைப் வைத்தியசாலைக்குமிடையேயான** ஒப்பந்தத்தின் நோக்கம் டானியா மரக்கறிகளை இரண்டுவாரத்துக்கு வைத்தியசாலைக்கு விநியோகம் செய்தலாகும். எனினும் டானியாவால் அதனை செயற்படுத்த முடியவில்லை. இதற்கான காரணமாக **டானியாவின்** சாரதி ஒருவர் கோவிட் 19 நோய்க்குள்ளாகியதுடன் ஏனைய ஊழியர்களும் தனிமைப்படுத்தப்பட்டதுடன் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தியதாலுமேயாகும்.

இங்கு ஒப்பந்த தரப்பினருக்கு அப்பாற்பட்டு ஒப்பந்தத்தை செயற்படுத்த முடியாத சாதாரண காரணத்தினால் ஒப்பந்தம் ஏற்பட்டதன் பின்னர் அதன் செயற்பாடு தடைப்பட்டது. கோவிட் 19 தாக்கமானது **டானியாவின்** கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டு உள்ளது. இங்கு ஒப்பந்தமானது நிலைகுலைவு காரணமாக முடிவுறுத்தப்பட்டது எனவும் டானியா ஒப்பந்த பொறுப்புக்களிலிருந்து விடுவிக்கப்படவும் வேண்டும்.

**வரையறுக்கப்பட்ட ஹெல்தி லைப் வைத்தியசாலைக்கு டோனி மீதான சட்ட ரீதியான உரிமைகள்.**

டோனி வரையறுக்கப்பட்ட ஹெல்தி லைப் வைத்தியசாலைக்கு தன்னால் சுத்தப்படுத்தும் திரவியங்களை நடைமுறையில் கேள்வி அதிகரிப்பு காரணமாக தன்னால் விநியோகிக்க முடியாதென்று அறிவித்தார். நீதிமன்றத்தின் விதிகளுக்கு அமைவாக ஒரு தரப்புக்கான விலை அதிகரிப்பானது ஒப்பந்தத்தை நிலைகுலைவடையச் செய்யாது.

அந்தவகையில் **டோனி** தூயப்படுத்தும் திரவியங்களை விநியோகிக்க தவறியதானது ஒப்பந்த மீறல் ஆகும். பாதிக்கப்பட்டவரான **ஹெல்தி லைப் வைத்தியசாலை** பின்வரும் நிவாரணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

1) நட்டஈட்டை பெற நடவடிக்கை எடுக்கலாம்.
2) குறித்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுமாறு நடவடிக்கை எடுக்கலாம்.
3) தொடர்ந்து செயற்படுவதிலிருந்து இடைவிலகலாம்.
4) ஒப்பந்தத்தை இடைநிறுத்தலாம்
5) தடை ஆணைக்கான ஏற்பாட்டை மேற்கொள்ளலாம்.
6) முறையற்ற சேர்க்கை கோட்பாட்டின் கீழான நிவாரணம்

*(07 புள்ளிகள்)*

**(இ)**

***அத்தியாயம் 02 - ஒப்பந்தச்சட்டம்***

டானியாவுக்கான மிகமுக்கிய பாதுகாப்பானது ஒப்பந்தம் நிலைகுலைவினால் தடைப்பட்ட நாளிலிருந்து அவ்வொப்பந்தம் வலிதற்றதாகும். ஒப்பந்தமானது நிலைகுலைவு காரணமாக முடிவுறுத்தப்படும் வரைதான் ஒப்பந்தத் தரப்பினர்கள் பொறுபாளியானவர்களாக இருப்பார்கள். நிலைகுலைவினால் ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்ட பிறகு ஒப்பந்தத் தரப்பினர்கள் தமது ஒப்பந்த கடமைகளை நிறைவேற்றுவது அவசியமில்லை.

இங்கு அரச தலையீடு காரணமாக டானியாவின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டு ஒப்பந்தமானது நிலைகுலைவு காரணமாக பூர்த்தி செய்யமுடியவில்லை. எனவே கோவிட் 19 க்கு பிறகு டானியாவுக்கு ஒப்பந்தத்தை தொடர முடியும் ஏன்னென்றால் இங்கு ஒரு ஒப்பந்த முறிவு இல்லை என்பதாலாகும். எனவே ஆளுக்கு ஒப்பந்த முற்பணத்தை மீள செலுத்த வேண்டிய அவசியமும் இல்லை.

**வழக்கு** : ***Avery Vs Bowden and Taylor Vs Codwell***

aat SRI LANKA

*(04 புள்ளிகள்)*

**(B)**

***அத்தியாயம் 03 - பொருள் விற்பனை ஒப்பந்தச்சட்டம்***

(அ)

பொருள் விற்பனை கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக விற்பனையாளர் விற்பதற்கான உரிமையை கொண்டிருப்பதானது உட்கிடையான நிபந்தனையும் கட்டுப்படுத்தும் ஆகும். இது உட்கிடையான நிபந்தனையாகும்.

பொருள் விற்பனை கட்டளை சட்டத்தின் பிரிவு 13 (1) இன் படி விற்பனையாளர் விற்பனை செய்வதற்கான உரிமையை கொண்டிருக்க வேண்டும். விற்பனை செய்வதற்கான உடன் படிக்கையின் போது உரிமைமாற்றப்படுகின்ற சந்தர்ப்பத்தில் விற்பனையாளர் விற்பனை செய்வதற்கான உரிமையை கொண்டிருத்தல் வேண்டும். இவ்வாறு உரிமையாளர் அல்லாத விற்பனையாளர் ஒருவர் பொருளை விற்பனை செய்திருப்பின் உட்கிடையான நிபந்தனைகளுக்கமைவாக பாதிக்கப்பட்ட கொள்வனவாளருக்கான நட்டஈடுகளை விற்பனையாளர் செலுத்துதல் வேண்டும்.

**Rowland vs Dival** வழக்கில் **Dival** மோட்டார் கார் ஒன்றை நல்லெண்ணத்துடன் திருடர் ஒருவரிடமிருந்து வாங்கினார். அக்காரை அவர் Rowland க்கு விற்பனை செய்தார். இவர் ஓர் விற்பனை விநியோகஸ்தராக அக்காரை தனது விற்பனை நிலையத்தில் காட்சிபடுத்தினார். பின்பு மூன்றாம் நபருக்கு விற்பனை செய்தார். இரண்டு மாதங்களுக்கு பின்னர் பொலிஸ் காரைக் கைப்பற்றி அதனை உண்மையான உரிமையாளரிடம் ஒப்படைத்தது. Rowland மூன்றாம் நபருக்கான கொடுப்பனை செலுத்தினார். Rowland தான் செலுத்திய பணத்ததை Dival இடம் கேட்டபோது ஆனால் Dival திருப்பி செலுத்த மறுத்தார். நீதிமன்றமானது Dival க்கு விற்பனை செய்வதற்கான உரித்து இல்லை எனவும் Rowland க்கு தான் செலுத்திய பணத்தை மீளப்பெற உரித்துடையவர் என தீர்த்தது.

இங்கு வழங்கப்பட்ட தகவல்களும் மேற்கூறிய வழக்கிற்கு ஒத்த தகவல்களாகும். இங்கு **றைட் கம்பனிக்கு** காரை விற்பனை செய்வதற்கான உரித்து இல்லை ஏனெனில் அது திருடப்பட்டது என்பதாலாகும். எனவே இக்கம்பனி உட்கிடையான நிபந்தனையான உரித்து தொடர்பான நிபந்தனை மீறியுள்ளது. எனவே **றைட் கம்பனி கமாலிடம்** வாங்கிய முழு தொகையையும் அதாவது பாவனைக்கான எதுவித கழிப்பனவுமின்றி செலுத்த கடமைப்பட்டுள்ளது. மேலும் றைட் கம்பனி களவாடப்பட்ட கார் என்பதை அறிந்தே செயற்பட்டிருந்தது. ஆகவே றைட் கம்பனி தனது அறிவுக்கமைவாகவே திருடப்பட்ட காரை விற்பனை செய்வதற்க்கான தண்டனையை ஏற்க்க வேண்டும்.

*(07 புள்ளிகள்)*

(ஆ)

- ❖ தடுத்து வைப்பதற்கான உரிமை
- ❖ மீள் விற்பனை செய்வதற்கான உரிமை
- ❖ இடைவழியில் தடுப்பதற்கான உரிமை

*(03 புள்ளிகள்)*

*(மொத்தம் 25 புள்ளிகள்)*

***C* பகுதி முடிவு**

aat SRI LANKA

## *Notice:*

These answers compiled and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.
These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers". The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*